www.Padasalai.Net

**01.04.2024 முதல்** 30.09.2024
**ஆறு மாதங்களுக்கு**
**சம்பளம் வழங்கும் அதிகாரம்**
**(Pay Authorization for the month of**
**April – 2024 to September –2024)**

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

**கடித (efile) எண்./2999/பக5(1)/2024 –1, நாள்.25.04. 2024**

26/04/2024
இ3

அனுப்புநர்
திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – 2016–2017 ம் கல்வி ஆண்டு தமிழகத்தில் உள்ள 19 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலை பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, அப்பள்ளிகளுக்கு 95 பட்டதாரி அனுமதிக்கப்பட்டது. இத்தற்காலிக 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு முடிவடைந்தமை 01.01.2024 முதல் ஆசிரியர் பணியிடங்களுக்கு ஆணை வழங்கப்பட்டு 31.03.2024 வரை மூன்று மாதத்திற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு (Express Pay Order) வெளியிடப்பட்டு முடிவுற்ற நிலையில், 01.04.2024 முதல் மேலும் ஆறு மாதங்கள் தொடர் நீட்டிப்பு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்கக் கோரியுள்ளது– தொடர்பாக

பார்வை
1. அரசாணை (நிலை)எண். 105, பள்ளிக் கல்வித் (ப.க5(1))த்துறை, நாள்.10.06.2022.
2. பள்ளிக் கல்வி இயக்குயரின் கடித ந.க.எண்.019616/எல்/இ3/2023, நாள் 14.02.2024.
3. பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.001513/எல்/இ3/2021, நாள்.18.01.2024.

--------

பார்வை 1–ல் காணும் அரசணையில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு 2016 – 2017ம் ஆண்டு தமிழகத்தில் 19 நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு தரம் உயர்த்தப்படும்

www.Padasalai.Net

பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர்கள் வீதம் 19 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 95 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் பார்வை 2-ல் காணும் அரசாணையில் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 95 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட தொடர் நீட்டிப்பு காலம் 31.12.2023 அன்றுடன் முடிவடைந்துவிட்டது எனவும் மேற்படி பணியிடங்கள் அனைத்தும் நிரப்பட்டுள்ளதாகவும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு பெற காலதாமதம் ஆகும் நிலையில், இப்பணியிடங்களுக்கு 01.02.2024 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேற்குறிப்பிட்டுள்ள 95 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.04.2024 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஏப்ரல் 2024 முதல் செப்டம்பர் – 2024 முடிய ஆறு மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3.இக்கடிதம், இத்துறையின் மின்கோப்பு எண் e.file. 2999/ப.க5(1)/2024 –ல் நிதித்துறையிடம்,18.04.2024 நாளில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது

தங்கள் நம்பிக்கையுள்ள,

25/4/24

(அரசு சார்பு செயலாளர்)
அரசு செயலாளருக்காக

25.4.2024 4/7

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6

மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நிதி(கல்வி–II)துறை , சென்னை–9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: இவ்வியக்ககத்தின் ந.க எண்: 001513/அ2/இ3/2022 நாள்: 26.04.24

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் அனுப்பப்படுகிறது.

பெறுநர்:-
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

இணை இயக்குநர்.
26/04/24